**நுவரெலிய பிரதேச சபை**
**நுவரெலிய மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தம்பர் 28 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நுவரெலிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) 2017 ஆம் ஆண்டின் போது நானுஓயா கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்தின் நிர்மாணச் செயற்திட்டத்திற்காக ரூபா 3,000,000 ஆன நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் அது நிறைவேற்றப்படாதிருக்கையில் கடன்கொடுத்தோர் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் அப்பெறுமதியில் கடன் கொடுத்தோர் மற்றும் ஆண்டின் செலவினம் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய முத்திரைக் கட்டண வருமானம் சரியாக இனங்காணப்படாமல் சனவரி முதல் யூலை வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 4,368,620 தொகை முத்திரைக் கட்டண வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 17,966,142 கிடைத்திருந்ததுடன் அதில் ரூபா 10,115,842 தொகையான முத்திரைக் கட்டண வருமானம் கடன்கொடுத்தோருக்கு செலவு வைக்கப்பட்டு எஞ்சிய ரூபா 7,850,300 நீதிமன்ற தண்டப்பணக் கடன்பட்டோர் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு முத்திரைக் கட்டண கடன்பட்டோர் ரூபா 7,850,300 கூடுதலாகவும் நீதிமன்ற தண்டப்பணக் கடன்பட்டோர் கணக்கு அப்பெறுமதியால் குறைத்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் சபை நிதியத்தை பயன்படுத்தி செயற்படுத்தப்பட்டிருந்த நிர்மான வேலைகளின் பெறுமதி ரூபா 1,266,177 ஆன நிர்மானக் கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்படாமையால் மீளாய்வாண்டின் இறுதியில் நிர்மாண கடன்பட்டோர் மற்றும் ஆண்டின் வருமானம் அப்பெறுமதியை கூடுதலாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) சபைக்குரிய 12 ஏக்கர் 3 ரூட் 38.83 பேர்ச் அளவிலான 21 காணித்துண்டுகள், பரப்பளவு நிச்சயிக்கப்படாத 20 காணித்துண்டுகள், நானுஓயாவில் அமைந்துள்ள 06 கடைகள் 01 கழிவுப்பொருள் சேகரித்துப் இயந்திரம் 14 அலுவலக உபகரணங்களுக்குரிய 191 அலகுகளின் பெறுமதி இனங்காணப்படக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் மூலதன மானிய வருமானம் ரூபா 34,144,610 ஆக இருந்த போதிலும் இது ரூபா 35,420,359 என ரூபா 1.275,929 கூடுதலாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டிற்குரிய மூலதனச் செலவினம் ரூபா 35,410,788 ஆக இருந்த போதிலும் அது ரூபா 35,800,687 என ரூபா 389,899 கூடுதலாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் 03 கணக்கு மீதிகளின் பெறுமதி அக்கணக்கு மீதிகளுக்குரிய பட்டோலைகளுடன் ஒப்பிட்ட போது ரூபா 745,470 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது.

### 1.3.3 தொங்கல் கணக்குகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தொங்கல் கணக்கில் ரூபா 67,129,574 ஆன வரவு மீதி காணப்பட்டதுடன், அம்மீதி 2014 ஆம் ஆண்டு முதல் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் முன்கொண்டு வரப்பட்டு வந்தது.

### 1.3.4 செலுத்தவேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட செலுத்த வேண்டிய 02 கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 811,733 ஆக இருந்தது.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 44,122,476 ஆன 04 சொத்து விடயங்கள் ரூபா 29,358,964 ஆன 02 பொறுப்பு விடயங்கள் மற்றும் ரூபா 10,706,281 ஆன 12 நாட்குறிப்பு பதிவுகள் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

### 1.3.6 இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 371(2) இன் பிரகாரம் 2014 – 2015 காலப்பகுதியில் 02 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 32,000 ஆன முற்பணம் மீளாய்வாண்டின் இறுதிவரை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

-------------------------

### 2.1 நிதி விளைவுகள்

---------------------------------

சமர்ப்பித்திருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,473,986 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 38,575,088 ஆகக் காணப்பட்டது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

-------------------------------

சபை வங்கியொன்றில் பேணிச் செல்லும் கணக்கொன்றில் 2017 யூன் மற்றும் யூலை மாதங்கள் தவிர ஏனைய ஒவ்வொரு மாத இறுதியிலும் ரூபா 13,000,000 இற்கு மேற்பட்ட பணமொன்று மீதியொன்று காணப்பட்டதுடன் 2017 யூன் மற்றும் யூலை மாதங்களில் ஒவ்வொரு மாத இறுதியிலும் ரூா 3,000,000 இனை மிகைத்த பண மீதியொன்று காணப்பட்டது. இம்மிகைப் பணத்தை பொருத்தமான வகையில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 வருமான நிருவாகம்

-----------------------------------

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் அத்தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் ஒப்பிடும் போது இணக்கமின்மைகள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரிகள் | 5,175,187 | 4,409,317 | 3,990,562 | 6,390,342 | 5,865,203 | 4,349,870 | 4,495,731 | 6,072,433 |
| வாடகைகள் | 7,219,305 | 9,147,983 | 9,199,590 | 717,899 | 23,957,372 | 7,312,409 | 6,850,021 | 2,533,165 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 3,565,000 | 6,730,068 | 6,730,068 | - | 6,250,000 | 6,355,042 | 6,526,762 | - |
| ஏனைய வருமானம் | 15,129,860 | 16,259,252 | 29,920,138 | 11,767,528 | 12,270,380 | 39,951,449 | 43,822,947 | 29,770,938 |

#### 2.3.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

-----------------------------------------------------------------

ஆண்டின் ஆரம்பத்தின் போது காணப்பட்ட நிலுவை வீத வரி, ஏக்கர் வரி, காணி வரி மற்றும் கடை வாடகை அறவிடும் சதவீதம் 35 சதவீதத்தை விட குறைந்த பெறுமதியொன்று எடுத்திருந்ததுடன் மீளாய்வாண்டின் பட்டியலிடப்பட்ட வீத வரி நீர்க்கட்டணம் மற்றும் கடை வாடகை அறவீடும் 52 சதவீதத்திற்கு குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது.

**2.3.3 வாடகை**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நிலுவை கடை வாடகை பெறுமதி ரூபா 693,012 ஆக இருந்ததுடன் அக்கடைகளை குத்தகைக்குப் பெற்றுக்கொண்ட 14 குத்தகையாளர்களிடமிருந்து 06 மாதங்கள் முதல் 20 மாதங்கள் வரையான காலம் தாமதித்திருந்த ரூபா 95,920 ஆன குத்தகை வாடகை உள்ளடக்கப்பட்டிருந்தது.

**2.3.4 நீர் கட்டணம்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நிலுவை நீர்க் கட்டண அளவு ரூபா 1,361,484 ஆக இருந்ததுடன் அந்நிலுவை கட்டணங்களில் கந்தபொல உப அலுவலக அதிகாரப்பிரதேசத்தன் 30 நீர் பாவனையாளர்களிடமிருந்து 2011 ஆம் ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டி காணப்பட்ட ரூபா 68,644 ஆன நிலுவை நீர்க் கட்டணமும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

**2.3.5 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 இல் கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 1,775,638 தொகையும் முத்திரைக் கட்டணங்களாக ரூபா 9,991,890 தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் கட்டளைச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், சுகாதாரம், பொது உபயோக சேவைகள் மற்றும் பொதுப் வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நல விவகாரங்கள், வசதிகள் மற்றும் நலன்கள் ஆகிய சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) செயற்திட்டங்களை பூர்த்தி செய்யப்படாமை**

பார்க் தோட்ட எஸ்க்டெல் பகுதி குடிநீர் செயற்திட்டம் 2018 சனவரி 15 ஆந் திகதியில் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட வேண்டியதுடன் அதற்காக ரூபா 526,432 பெறுமதியான உபகரணங்கள் 2017 திசெம்பர் 29 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் இச் செயற்திட்டத்தின் வேலைகள் 2018 யூலை 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை**

"மாகாண திட்டவட்டமான அபிவிருத்தி மானிய – 2016" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நானுஓயா கழிவுப்பொருடகளை வேறுபடுத்தும் நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக 2010 ஆகஸ்ட் மாதத்தின் போது ரூபா 3,000,000 நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த செயற்திட்டம் 03 மாதங்களுக்ககுள் பூர்த்தி செய்யப்பட்டு பட்டியல் மீள் நிரப்புவதற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய

போதிலும் 2018 யூலை 18 ஆந் திகதி வரை இந்நிர்மாண வேலைக்குரிய எந்தவொரு செயற்பாடும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் தொடர்பான பிரதேச சபை போதியளவில் அறியாமல் இருந்ததுடன் அது தொடர்பாக போதியளவு பணிகள் மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

(அ) 2009 ஆம் ஆண்டு முதல் 2016 ஆண்டுவரையான காலப்பகுதியில் வெவ்வேறு செயற்பாடுகளுக்கான 14 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 793,027 ஆன முற்பணம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை பராமரித்துச் செல்லும் நடைமுறைக் கணக்கிற்கு உரிய 2017 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கி கணக்கிணக்க கூற்றின் பிரகாரம் 2013 பெப்ரவரி முதல் 2014 திசெம்பர் வரையான காலப்பகுதியில் கிடைத்திருந்த ரூபா 142,040 பெறுமதியான 04 காசோலைகள் மதிப்பிழந்திருந்த போதிலும் அக்காசோலைகளின் பெறுமதி 2017 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அறவிடப்படிருக்கவில்லை.

(இ) 2000 இன் 53 மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தம் செய்யப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்களுக்கு இணங்க 2008 சனவரி 25 ஆந் திகதிய 1523/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொண்டிருந்த 18 அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடிக் காலம் முடிவடைந்திருந்த போதிலும் புதிய அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 மனித வள முகாமைத்துவம்

**ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகை**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 12 பதவிகளில் 45 வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.4 தொழிற்பாட்டு செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1988 மே 17 ஆந் திகதிய 1988/22 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் வீதிவரி அறவீட்டுக்காக ஆதனங்களின் மதிப்பீடு 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் பிரதேச சபை 2009 ஆம் ஆண்டின் பின்னர் வீதவரி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 மார்ச் 17 ஆந் திகதிய மமா/உமஆ/2016/3 ஆம் இலக்க 2016/3 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம்

கடைகளுக்காக மாதாந்த வாடகை பிரதான மதிப்பீட்டின் கீழ் மதிப்பீடு அல்லது உள்ளூராட்சி மன்றத்தின் மதிப்பீட்டாளர் ஒருவர் இருந்தால் மதிப்பீட்டின் பிரகாரம் தீர்மானிக்கப்பட்டு அறவிட முடியும் எனினும் சபையின் 73 கடைகளுக்காக சபையின் வருமான பரிசோதகரினால் 2014 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் அறவிடப்பட்டிருந்தது,

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 சொத்துகளிலிருந்து கிடைக்க வேண்டிய வருமானம் பெற்றுக் கொள்ளப்படாமை

சபையின் செயலாளர், பதவிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த அரசின் விடுதி 2016 ஒக்தோபர் 01 ஆந் திகதி முதல் பயன்படுத்தாமல் காணப்பட்ட போதிலும் அதனை வேறு பொருத்தமான உத்தியோகத்தருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் விளைவற்று காணப்பட்டது இதன் காரணமாக சபைக்கு அறவிடக் கூடியதாக இருந்த வீட்டு வாடகை வருமானமும் இழக்கப்பட்டிருந்தன.

### 3.5.2 கையேற்கப்படாத சொத்துக்கள்

சபையின் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் பஜாஜ் வகையிலான மோட்டார் சைக்கிலொன்று குபோட்டா வகையிலான உழவு இயந்திரமொன்றினதும் உரித்து சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்கு சொந்தமான டயன் கெப் வண்டியொன்றும் 03 மோட்டார் சைக்கில்களும் 03 ஆண்டு காலமாக விளைவற்றுக் காணப்பட்டதுடன் 02 உழவு இயந்திரங்கள் ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக திருத்த வேலைகள் செய்யப்படாமல் தனியார் கராஜ் ஒன்றில் வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) சபைக்குரிய 5000 லீற்றர் பவுசரொன்று 02 ஆண்டு காலமாகவும் 3500 லீற்றர் நீர் பவுசர் ஒன்று 01 ஆண்டிற்கு அண்மித்த காலமாகவும் பயன்படுத்தாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

### 3.5.4 வருடாந்த பொருள் மெய்மையாய்வு

சபை 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்டிருந்த 05 நூலகங்களில் 642 புத்தகங்களின் பற்றாக்குறை மற்றும் 08 உபகரணங்களின் 15 அலகுகளின் பற்றாக்குறை என்பவற்றின் பெறுமதி கணக்கிடப்படாமல் இருந்ததுடன் பொறுப்பு வாய்ந்த தரப்பினர் இனங்காணப்பட்டோ அல்லது பற்றாக்குறை தொடர்பாக வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5.5 வாகனப் பயன்பாடு

2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் சபைக்குரிய 06 வாகனங்களின் எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5.6 ஒப்பந்த நிர்வாகம்**

**(அ) நுவரெலிய பிரதேச சபைக்குரிய தலைமை அலுவலக கட்டிட நிர்மாணம் - கொட்டகல**

நுவரெலிய பிரதேச சபைக்குரிய தலைமை அலுவலக கட்டிட நிர்மாணத்திற்காக ஒப்பந்தக்காரரொருவருடன் 2015 மே 15 அந் திகதி 81,476,575 ஆன உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்த உடன்படிக்கையின் பிரகாரம் 2015 நவம்பர் 15 ஆந் திகதி வரையிலும் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த:து. எனினும் 2018 யூலை 31 ஆந் திகதி வரை வேலைகள் பூர்த்தி செய்யப்படாமல் இருந்ததுடன் உரிய நிர்மாண வேலைகள் இடை நிறுத்தப்பட்டிருந்தன.

**(ஆ) கொட்டகல ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர் விடுதி நிர்மாணம்**

கொட்டகல ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர் விடுதி நிர்மாணம் ரூபா 1,180,000 கொடுப்பனவு செய்யும் போது பட்டியல் தயாரிக்காமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்து. எனினும் நிர்மாணங்களில் பல்வேறு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டதுடன் 2018 யூலை 31 ஆந் திகதி வரையிலும் இவ்வீடு குடியிருப்பிற்காக எவருக்கும் வழங்காமல் நிலையற்று காணப்பட்டது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் படி மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுக்கிடையே 06 வருமான விடயங்களில் 14 சதவீதம் முதல் 88 சதவீதம் வரையும் 08 செலவின விடயங்களில் 13 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான் விலகல் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமாக கட்டுப்பாட்டு கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது பிரதேச சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| **முறைமைகள்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|
| (அ) கணக்கீடு | கணக்கேடுகள் மற்றும் பதிவேடுகள் நாளதுவரையாக பேணப்படாமை |
| (ஆ) சொத்துக்கள் கட்டுப்பாடு | i. உரித்து கையேற்கப்படாமை<br>ii. விளைவற்று காணப்பட்டமை<br>iii. பெறுமதி கணக்கிடப்படாமை<br>iv. பாதுகாப்பு உறுதிப்படுத்தாமை |
| (இ) கடன்பட்டோர்/ கடன் கொடுத்தோர் நிர்வாகம் | i. அட்டவணை தயாரிக்கப்படாமை<br>ii. கடன்கொடுத்தோர் மீதிகள் தீர்வு செய்யப்படாமை |
| (ஈ) ஊழியர் முகாமைத்துவம் | வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படாமை |